# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – IV

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி –22 | 05–03–2004 | வெள்ளிக்கிழமை | ஓசை –016



படசுருள்கள் அனைத்தையும் கணினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்
படம் பிறேம்செய்தல்,
அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.
R.V
பந்தல் சேவை,
(சி-8689) தர்மபுரம்.


# கிழக்கில் நெருக்கடி தற்காலிகமானது; இதற்கான தீர்வு விரைவில் எட்டப்படும்!

## கண்காணிப்புக்குழுத் தலைவருடனான சந்திப்பில் சு.ப.தமிழ்ச்செல்வன் எடுத்துரைப்பு

(கிளிநொச்சி)

**"கிழக்கு மாகாணத்தில் தற்போதைய நெருக்கடி தற்காலிகமானது. இதற்கான தீர்வு மிக விரைவில் எட்டப்பட்டுவிடும்" என நேற்று முற்பகல் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருடனான சந்திப்பின்போது அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

நேற்று முற்பகல் 11.00 மணியளவில் உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சிக்கு வந்திறங்கிய கண்காணிப்புக்குழுத் தலைவர் ரொண்ட் புறூவ்ஹொவ்டே, துணைத்தலைவர் ஹக்ரப் ஆகியோர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன், கிழக்கு மாகாண அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இச்சந்திப்பில் சமாதான செயலகத்தின் இயக்குநர் புலித்தேவனும் கலந்து கொண்டார். கலந்துரையாடல்கள் மிகவும் சுமுகமான சூழ்நிலையில் இடம்பெற்றதுடன், அதில் வடக்கு-கிழக்கில் இடம்பெறவிருக்கின்ற தேர்தல் தொடர்பான விடயங்கள், கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலவரங்கள் என்பன தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

கிழக்கு மாகாணத்தின் தற்போதைய சூழ்நிலை தொடர்பாக எடுத்து விளக்கிய அரசியல் துறைப் பொறுப்பாளர் அவர்கள்,

(IV ஆம் பக்கம் பார்க்க)

*– இடம் பெயர்ந்திருந்த மக்களுக்கு –*

## தாம் அன்பளிப்பாக வழங்கிய பொருட்களை மீண்டும் படையினர் பறித்துச் சென்றனர்

இராணுவ உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கென படையினர் வழங்கிய பொருட்களை மீண்டும் அவர்களே எடுத்துச் சென்ற சம்பவமொன்று சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. சாவகச்சேரி தனங்களப்பு வீதியை அண்டிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கெனவே இப் பொருட்களை யாழ். படைத் தலைமை முன்னர் வழங்கியிருந்தது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருகையில், இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தால் பாதிக்கப்பட்டு "உதயசூரியன்" கிராமத்தில் முகாம் அமைத்து வாழ்ந்த குடும்பங்களது மலசலகூட நிர்மாணத்திற்கெனவே கட்டடப்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## 24 மணிநேரத்தில் 18 வன்முறைகள்

நேற்றுக் காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்தில் 18 தேர்தல் வன்முறைகள் நடைபெற்றிருக்கிறது. இதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 6 முறைப்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டிய ஈ.பி.டி.பி, சங்கரி ஆதரவாளர்கள் கைது

*கொடிகளும் பொலிசாரால் அறுத்தெறியப்பட்டன*

தேர்தல் பிரசார சுவரொட்டிகளை ஒட்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட 9பேர் யாழ் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று இடம்பெற்ற இக்கைதுச் சம்பவத்தில் வீ.ஆனந்த சங்கரியின் சுயேட்சைக்குழு மற்றும் ஈ.பி.டி.பியினர் ஆகியோருக்குச் சார்பாகப் பிரசாரங்களில் ஈடுபட்டோரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

தேர்தல் சட்டதிட்டங்களுக்குப் புறம்பாக சுவரொட்டிகளை ஒட்டியுள்ளதாகக் கைது செய்யப்பட்டவர்கள் விசாரணையின் பின் எச்சரித்து விடுவிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை தேர்தல் சட்டத்திற்குப் புறம்பாக ஈ.பி.டி.பியினரின் அலுவலகம், ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதரணி) அலுவலகம் ஆகியவற்றின் முன்பாக வீதிக்குக் குறுக்கே கட்டப்பட்டிருந்த அக்கட்சிக்கொடிகளும் பொலிசாரால் நேற்று அறுத்தெறியப்பட்டன. (33)

## தன்னாட்சி அதிகாரசபை அமைவதை எவரும் தடுத்து நிறுத்த முடியாது

### கூட்டமைப்பின் திருமலை முதன்மை வேட்பாளர் சம்பந்தன்

(திருகோணமலை)

"வடக்கு-கிழக்குக்கு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அமையும் காலம் வந்துவிட்டது. அதனை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது அக்கட்டத்துக்கு வந்துவிட்டோம். இந்த நிர்வாக அமைப்பில் சம அந்தஸ்துடன் கூடிய பங்காளிகளாக முஸ்லிம் மக்கள் எம்முடன் இணைந்து கொள்ளவேண்டும்".

திருகோணமலை மாவட்டத்தின் வடக்கு எல்லைப்புற முஸ்லிம் கிராமமான புல்மோட்டையில் கடந்த செவ்வாய்க்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் கூட்டமைப்பின் திருமலை மாவட்டத்தலைமை வேட்பாளர் இரா.சம்பந்தன் இவ்வாறு அழைப்பு விடுத்தார். மௌலவி அப்துல் காதர் பாஸிமின் கிறாஅத் ஓதலுடன் கூட்டம் ஆரம்பமானது. சமாதான நீதவான் ஜே.எம்.மீராசாய்பு தலைமை வகித்தார். திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் சாகுல் ஹமீதுவை ஆதரித்து இக்கூட்டம்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## கல்முனையில் கைக்குண்டு வீச்சு ஈ.பி.டி.பி வேட்பாளர் காயம்!

கல்முனை நகரில் நேற்று நண்பகல் இடம்பெற்ற கைக்குண்டு வீச்சு சம்பவத்தில் அம்பாறை மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடும் ஈ.பி.டி.பி வேட்பாளர் ஒருவர் உட்பட நான்கு பேர் காயமடைந்தனர்.

காயமடைந்த நால்வரில் வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவரும் பொதுமக்கள் இருவரும் இருப்பதாக கல்முனை பொலிசார் தெரிவித்துள்ளனர். வானொன்றில் தேர்தல் பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஈ.பி.டி.பி.யின் வேட்பாளரான துரைராஜா லால் என்பவர் மீது இந்தக்குண்டு வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்தக் கைக்குண்டு வீச்சை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. கைக்குண்டு வீச்சில் ஈ.பி.டி.பி.யினர் வந்த வாகனமும் சேதமடைந்தது.

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்காக முழுமையான பிரச்சாரத்தில் ஈடுபடுக

*இ.த.அ. சங்கச் செயலாளர் ஆசிரியர்களிடம் கோரல்*

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவாக பிரச்சாரங்களில் ஈடுபட்டு அதன் வேட்பாளர்கள் முழுமையாக வெற்றிபெற சகல விதங்களிலும் ஒத்துழைப்பு நல்குமாறு தமிழர் ஆசிரியர் சங்கம் ஆசிரியர் சமூகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசியல் உரிமைகள், இலங்கைக் குடியரசு யாப்பின் 09ஆவது சட்ட திருத்த மூலம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இலங்கை அதிபர், சேவை வகுப்பு I,II,III இல் உள்ளவர்களும், இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு I,II-1,II-2, III-2, III1 இல் உள்ள அனைவருக்கும் அரசியல் உரிமைகள்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் வீதி விபத்தில் மாணவி பலி; புலிகளின் தலையீட்டால் பதற்றம் தணிவு!

(திருகோணமலை)

திருகோணமலை- திருக்கடலூர் பகுதியில் ஐஸ் தொழிற்சாலைக்கு முன்பாக நேற்று காலை 7.30 மணியளவில் லொறியொன்று மோதி பதினொரு வயது மாணவி செல்வி கணேஸ் அச்சுதா (கீர்த்தனா) அந்த இடத்திலேயே உயிரிழந்தார். பதின்மூன்று வயது மாணவன் கணேஸ் சிவதாஸ் (ஹசான்) காயமடைந்தார். இறந்த மாணவி ஆண்டு 6வகுப்பில் படித்து வந்தார். காயமடைந்த மாணவன் ஆண்டு 7வகுப்பில் படித்து வருகின்றார். திருகோணமலை புனித பிரான்ஸிஸ் சவேரியார் மகா வித்தியாலய மாணவர்களான இவ்விருவரும் பாடசாலைக்கு நடந்து வந்துகொண்டிருந்த போதே லொறியினால் மோதுண்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தை அடுத்து, திருக்கடலூர் பகுதியில் பதற்றம் நிலவியது. மக்கள் ஆத்திரமடைந்த நிலையில் காணப்பட்டனர். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரா.சம்பந்தன், க.துரைரட்ணசிங்கம், விடுதலைப்புலிகள் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் மற்றும் பிரமுகர்கள் அந்த இடத்துக்கு விரைந்து சென்று நிலவரத்தைக் கட்டுப்பாட்டுக்குள்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## பிரச்சாரத்தில் ஈடுபட்ட ஈ.பி.டி.பி. யினர் மக்களின் கேள்விகளால் ஓட்டம்

பருத்தித்துறை நகரப்பகுதியில் இராணுவப்பாதுகாப்புடன் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ள முற்பட்ட ஈ.பி.டி.பி.யினர், பொது மக்களது காட்டமான கேள்விக்கணைகளைத் தாங்கமுடியாது இடை நடுவில் நழுவிய சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று மாலை பருத்திதுறை பழைய நகரப்பகுதிக்கு இராணுவப் பாதுகாப்புடன் வந்திருந்த ஈ.பி.டி.பி. அமைப்பின் வேட்பாளரான மகேஸ்வரி வேலாயுதம் அப்பகுதியில் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ள முற்பட்டிருந்தார். எனினும் அப்பகுதியில் நின்றிருந்த பொதுமக்கள் பிரச்சாரக் கூட்டத்தில் அக்கறை கொண்டிருக்கவில்லை.

எனினும் அப்பகுதியில் நின்றிருந்த வயோதிபர்கள் சிலர் ஈ.பி.டி.பி.முக்கியஸ்தர்களிடம் தொடர்ச்சியாகக் கேள்விகளை எழுப்பிப் பதிலளிக்குமாறு கோரினர். ஊடகவி

(IV ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வேந்தன் பல்கட்டும் நிலையம் கிளிநொச்சி

பல்கட்டுதல், மிதப்பு பற்களுக்கு கிளிப் போடுதல் என்பவற்றை சிறந்த முறையில் செய்து கொள்ள மத்திய கல்லூரி மைதானம் முன்பாக .வேந்தன் பல் கட்டும் நிலையம் ,யாழ் கண்டி சாலை, ஆனந்தபுரம்.
(சி.9319)

### தவறி விட்டது

தி.தீபன் ஆகிய எனது மோ.சைக்கிள் புத்தகம் அல்பம்,படிவம் உட்பட முக்கிய ஆவணங்கள் அடங்கிய ஐந்து சிப் (வாக்) பை புதுக்காட்டு சந்திக்கும் முகமாலைக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். (4288)

### இடமாற்றம்

மல்லாவியில் இயங்கி வந்த நிறைமதி நகையகம் (சுரேஸ் நகைத் தொழிலகம்) தற்போது கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்பாக நிறைமதி நகையகம் என்ற பெயரிலே இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளருக்கு தெரியப்படுத்துகிறோம். (4292)

## ஊழல் செய்தவர்கள் மீது நடவடிக்கை

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்தினூடாக செயல்திறன் அற்ற ஊழல் கறைபடிந்த தலைவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமூக பொருளாதார அபிவிருத்திக்கான திட்டங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை அமுல் செய்யத் தவறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சனாதிபதி தெரிவித்துள்ளார்.

எந்தக்கட்சி ஆட்சிப்பீடம் ஏறினாலும் தேசத்தை கட்டியெழுப்பும் கொள்கைகளை அமுல் செய்வதற்குதான் திடசங்கற்பம் பூண்டிருப்பதாக அவர் கூறியிருக்கின்றார்.

## தே.ஆணையாளர் சந்திக்கிறார்

(கொழும்பு)

பொதுத்தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சி செயலாளர்களை தேர்தல் ஆணையாளர் இன்று முதற்தடவையாக சந்திக்கின்றார்.

ஏப்ரலில் நடைபெறும் வாக்களிப்பிற்கான தேர்தல் செயலகம் மேற்கொண்டுள்ள ஏற்பாடுகள் பற்றி இச்சந்திப்பில் ஆராயப்படவுள்ளது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை தேர்தல் ஆணையாளர் சந்திப்பார்.

அதேவேளை தெரிவத்தாட்சி அதிகாரிகள் தபால் மூல வாக்காளர்களின் பட்டியலை தயாரித்து வருகின்றனர். தேர்தல் பணிகளில் ஈடுபடும் ஊழியர்களையும் வாகனங்களையும் அதேவேளை வாக்குச்சாவடிகளுக்கான நிலையங்களை தெரிவுசெய்யும் நடைமுறைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

## ஹெயிட்டி மக்கள் கோரிக்கை

(வாஷிங்டன்)

ஹெயிட்டிய சனாதிபதி வெளியேற்றப்பட்ட சூழ்நிலை குறித்து சர்வதேச ரீதியான விசாரணை ஒன்றை ஆரம்பிக்குமாறு ஹரிபிய சமூகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மத்திய ஆபிரிக்க குடியரசுக்கு சென்றிருக்கும் சனாதிபதி அடிஸ்டைட் தம்மை அமெரிக்க தலைவர்களே வெளியேற நிர்ப்பந்தித்ததாக தெரிவித்திருக்கிறார். ஆனால் அமெரிக்கா அதனை மறுத்துள்ளது.

கிளர்ச்சியாளர்களின் ஆதிக்கத்தை அடக்கி இரத்தக்களறி ஏற்படும் என்று அஞ்சியே அடிஸ்டைட் பதவிவிலகியதாகவும் அவரது பாதுகாப்புக் கருதி நாட்டில் இருந்து வெளியேற தாம் விமானம் ஒன்றை வழங்கியதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# முகமாலையில் வாக்குச்சாவடி அமைக்கலாம் யாழ். தெரிவத்தாட்சி அதிகாரி சிபார்சு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் கிளிநொச்சி வாக்காளர்களுக்கு முகமாலையில் கொத்தணி வாக்குச் சாவடிகளை நிறுவலாம்என்றுயாழ்ப்பாண தெரிவத்தாட்சி அதிகாரி தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளார்.

ராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் வாக்குச் சாவடி நிறுவப்படமாட்டாது என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்திருந்தார்.

அதேவேளை எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் குடாநாட்டில் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படும் எனவும் ஏப்ரல் 1ம் திகதி வரை இந்தப் பணி தொடர்ந்து நடைபெறும் என்று யாழ் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## துயர் பகிர்கிறோம்

### அமரர் பிரான்சிஸ்– அன்ரனி பெனான்டோ

எமது அன்புச் சித்தப்பா முன்னாள், உடையாரும், திடீர் மரணவிசாரணை அதிகாரியும், சமாதான நீதவானும் 4.3.2004ல் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரது ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

மி.ஞானேந்திரா
அளம்பில். (4295)

மிக்கேற்பிள்ளை–குடும்பத்தினர்
அளம்பில்- முல்லைத்தீவு.

## துயர் பகிர்வோம்

### அமரர் நல்லசாமி யோகலிங்கம்

எமது வித்தியாலய ஆசிரியர் ந. பத்மநாதன் அவர்களின் அன்புச் சகோதரன் நல்லசாமி யோகலிங்கம் அவர்கள் 04-03-2004 நேற்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்
நலன்புரிச் சங்கம்
கிளி/தருமபுரம் மகாவித்தியாலயம்.
(4296)

## நன்றி நவில்கிறோம்

எமது கல்லூரி மாணவர்களுக்காக இரண்டு கணனித் தொகுதிகளை அன்பளிப்பாக வழங்கிய துணுக்காயைச் சேர்ந்தவரும் தற்போது லண்டனில் வசித்து வருபவருமாகிய திரு.ந.செல்வராசாசிங்கம் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**பழைய மாணவர் சங்கம்,**
மு.மல்லாவி மத்திய கல்லூரி,
யோகபுரம்.

(4714)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### கந்தையா விவேகானந்தன்

குமுழமுனை, முள்ளியவளை

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 09–08–1955 | 14–02–2004 |

ஆனந்த மகன்று ஆறைந்து நாளானதையா
ஏனிந்த வாழ்வென்றாவெமைப்பிரிந்து நீசென்றாய்
நாமுன்னுடன் பழகிய நன்னாட்கள் நிகழ்வுகள்
தேனினியனானது திசைமாறிச் சென்றதையா

திருமதி கனகையா மாணிக்கம்
பிள்ளைகள், மருமக்கள்,
7ஆம் வட்டாரம், குமுழமுனை
(4277)

## ஏல விற்பனை

வன்னி கல்வி மேம்பாட்டுப் பேரவைக்குச் சொந்தமான36ஸ்ரீ3801(த12-1463) இலக்கம் கொண்ட உழவு இயந்திரமும், பெட்டியும் ஏலத்தில் விற்கப்படவுள்ளது. எதிர்வரும் 07-03-2004 தொடக்கம் 15-03-2004 வரை வவுனியா வடக்கு கனகராயன்குளம் கோட்டக் கல்வி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம் என்பதனை அறியத் தருகிறேன்.

ஏல விற்பனை நாள் பத்திரிகையில் விரைவில் அறியத்தரப்படும்

**செயலாளர்,**
தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை,
வன்னி.
(சி-9320)

## பணிநிலை வேண்டுகை

- விண்ணப்ப முடிவுத் திகதி :– 12–03–2004

01/திட்ட முகாமையாளர் :– வயதெல்லை 50–65 ஆங்கில மொழியில் பேசும், எழுதும் ஆற்றலும், முகாமைத்துவ முன் அனுபவமும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

02/பண்ணைப் பராமரிப்பாளர் :– கோழி, ஆடு, மாடு போன்றவற்றை பராமரித்தலில் முன் அனுபவம் உள்ளவர்கள்.

03/சமையலாளர் :– சுமார் 100 பேருக்கு சமையல் செய்த அனுபவம்.

(ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

"வன்னியில் இயங்கும் பார்வை, கேட்டல், பேச்சு குறைபாடுடைய சிறுவர், சிறுமிகளைப் பராமரிக்கும் இல்லத்தில் மேற்படி பணி நிலைக்கு வெற்றிடங்கள் உண்டு".

விண்ணப்பிக்க விரும்புவோர் புலன்குறைபாடுடைய சிறுவர்களின் நல்வாழ்வில் ஆர்வமும், அக்கறையும் கொண்டு சேவையாற்றும் திறன் உள்ளவர்களாக இருத்தல் அவசியமானதாகும்.

- சம்பள விபரம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

தெளிவான சுயவிபரங்களுடன் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**இனிய வாழ்வு இல்லம்,**
வள்ளிபுனம்,
புதுக்குடியிருப்பு. (4293)

சிவமயம்

## சபிண்டீகரண அழைப்பிதழ் (வீட்டுக்கிருத்திய)

தோற்றம்
28 • 02 • 1934



மறைவு
07 • 02 • 2004

### அமரர் அப்பர் சின்னத்துரை கணபதிப்பிள்ளை

(கடந்த 07-02-2004 சனிக்கிழமை எம்மைவிட்டு மீளாத் துயில் கொண்ட ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

-சிவிக் சென்ரர், வட்டக்கச்சி-

அவர்களின் சபிண்டீகரண (வீட்டுக் கருத்திய) கிரியைகள் எதிர்வரும் 08-02-2004 திங்கட்கிழமை அன்று அன்னாரின் யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

G.P.S. வீதி,
கட்டப்பிராய்,
கோப்பாய் தெற்கு,
யாழ்ப்பாணம்.
(4284)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்**

# சாவு அறிவித்தல்



## பிரான்சிஸ் அன்ரனி பெனான்டோ

முல்லைத்தீவு அளம்பிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் - அன்ரனி பெனான்டோ அவர்கள் 04.03.2004 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார். இவர் முன்னாள் உடையாரும், திடீர் மரண விசாரணை அதிகாரியும், சமாதான நீதவானும் (J.P) ஆவார். அன்னார் மொத்தக்கர் பரம்பரையைச் சேர்ந்த காலஞ்சென்ற மார்க்கு-பிரான்சிஸ் (பொலிஸ் விதானையார்) மக்கேலியா தம்பதிகளின் அன்பு மகனும், மாகிறேட்டின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மிக்கேற்பிள்ளை (மூப்பர்) அன்னம்மா ஆகியோரின் அன்பு சகோதரரும், திருமதி தங்கராணி, அந்தோனிமுத்து (கனடா), திருமதி இராஜகுமாரி சூசைப்பிள்ளை (தாதி ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்), திரு. பாலகிருஸ்ணன் (பதிவாளரும் சமாதான நீதவானும் அளம்பில்) திரு.சாந்திக்குமார் (முன்னைநாள் வதிவாளர் அளம்பில்), திரு.சதானந்தம் (பொறியியலாளர் கொழும்பு), திரு.சந்திரபோஸ், அமலதாஸ் (அமலன்) (ராசா வண்ணச்சோலை) உரிமையாளர்), ஞானானந்தம் (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும், திரு. இ.அந்தோனிமுத்து (இளைப்பாறிய அதிபர்)(கனடா), திரு.இ.சூசைப்பிள்ளை (இளைப்பாறிய தாதி உத்தியோகத்தர்) திருமதி இருதய மேரி பாலகிருஸ்ணன், திருமதி ஞானரெத்தினம் சாந்திக்குமார், திருமதி மோகனா சதானந்தம், திருமதி புஸ்பமலர் சந்திரபோஸ், திருமதி. லொறற்றா அமலதாஸ், திருமதி. லொறற்றா ஞானானந்தம் ஆகியோரது அன்பு மாமனாரும், யசித்தா (கனடா), தங்கராசா (லண்டன்), குணராசா (லண்டன்), ஜெயசீலன் (லண்டன்), ஜெயந்தன் (கனடா), கருணாகரன்-பேசியோசேப்பின் ஆசிரியை-வவுனியா, சாந்தாக்கிறிஸ்ரீன்-ஆசிரியை-வவுனியா, அமுதரோசலின் ஆசிரியை-செம்மலை அளம்பில், ராஜன்-ஜெர்மனி,

\# செல்வி.பா.ஜெயசீலி-இந்தியா
ஜெயசீலன்-ஜெயராஜி-செட்டிகுளம்
டானியல்-சவுதிஅரேபியா
வேணி-மெற்றில்டா-யாழ்பல்கலைக்கழகம்
\# உதயகுமார்-லண்டன்
உதயராணி-லண்டன்
உதயரூபினி-ஆசிரியை-வவுனியா
உதயரஜனி-(குட்டி)-வவுனியா
சுலோசினி-பல்கலைக்கழகம்
\# கம்சிகா-கனடா

மோகனரூபன்-கொழும்பு
\# சிங்கராசா-முருங்கன்
துரை வளர்மதி-முருங்கன்
குணசீலன்-முருங்கன்
மரியாசிறிதேவி-(காமென்ஸ் ,வவுனியா)
ஜெயசீலன்-முருங்கன்
மருராஜன்-மாணவன்-முருங்கன்
சோபிதா-மாணவி-முருங்கன்
பிரமிளா
யொய்சி
டேவிற் ஆகியோரின் அன்புப் பேரனும்

றோசி, றேசி, கனிசியோ அன்ரனி, வேர்ஜின் மேரிறேவா, அஸ்வின், அக்சயா, தேனுஜன், அனுஜன், குமுது, வினிது ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரது இறுதிச்சடங்கும் நல்லடக்கமும் வெள்ளிக்கிழமை (05.03.2004) மாலை 4 மணிக்கு அளம்பில் சேமக்காலையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(4294)

தகவல்:- மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
அளம்பில்

# சிறுபான்மைப் பலத்தைக் கொண்டு நிறைவேற்று அதிகாரத்தை நீக்க முயற்சி

## சந்திரிகா மீது பீரிஸ் குற்றச்சாட்டு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சிறுபான்மைப் பலத்தைக் கொண்ட அரசாங்கத்தின்கீழ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை மாற்றுவதற்கு முயற்சித்து வருகிறது.

இது சட்டவிரோதமான செயலாகும் என அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். நேற்று அவர் கொழும்பில் ஊடகமாநாட்டை நடத்தினார்

நிறைவெற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமல் அகற்ற முடியாது.

அவ்வாறான முயற்சி அரசியலுக்கு மாறான விடயமாகும் என அவர் குறிப்பிட்டார்.

முன்னணி சிறுபான்மை அரசாங்கத்தின் கீழ் நிறைவேற்று அதிகார முறையைஅகற்ற முயற்சிக்குமானால் அதற்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சி முரமை எதிர்ப்பை வெளியிடும்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசிய பட்டியல் முறைகோடனாது என குறிப்பிட்ட அவர், முன்னாள் பிரதம மந்திரி ரட்ணசிறிவிக்கிரமநாயக்கவின் பெயர் தேசியப் பட்டியலில் இடம்பெறாதபோதும் அவர் அதில் இருப்பதாக கூறப்படுவது இதற்கு உதாரணமாகும் என அமைச்சர் ஜ.எல்.பரிஸ் கூறினார்.

# உபமருந்தாளர் பயிற்சி வகுப்புக்கு சமுகம் தருமாறு கோரிக்கை

உப மருந்தாளர் பயிற்சி வகுப்புக்கள் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளதால் கீழ் குறிப்பிடப்படும் பெயர் விபரங்களையுடையவர்கள் தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப்பணியகத்துக்கு வருமாறு தமிழீழ சுகாதார சேவைகள் நிர்வாகப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

லூ. தவராணி- மருந்துக்களஞ்சியம் புதுக்குடியிருப்பு. லோ. விஜியராஜி-தேவிபுரம்'அ' பகுதி, புதுக்குடியிருப்பு. தே.அருள்விமலன்-திருநகர், கிளிநொச்சி. கி.கவிதா- உதயநகர் மேற்கு, கிளிநொச்சி. ச.சுகந்திரன்-மருந்துக்களஞ்சியம், புதுக்குடியிருப்பு, தெ.ரதிகலா- வைத்தியசாலை விடுதி, மல்லாவி. இ.வாசகீதன்-முருகன் மருந்தகம்,மல்லாவி. கு.விமலினி- சு.வை.அ.பணிமனை, மல்லாவி. ப.டென்சியா -பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை புதுக்டியிருப்பு. வ.சசீலன் - மருந்துப்பால்மா, புதுக்குடியிருப்பு. வி.தருமராசா- மல்லிகை வைத்தியசாலை, வட்டக்கச்சி. இ.நிலாந்தினா-மகேஸ்மருந்தகம், இராமநாதபுரம். செ.செல்வச்சந்திரன் -மாசார், பச்சிலைப்பள்ளி. ஜெ.வனிதா-தருமபுரம்,பரந்தன். ச.ஸ்ரீவிஜயா- மந்துவில்,புதுக்குடியிருப்பு. க.சுபேந்திரன்-இராமநாதபுரம்,கிளிநொச்சி. க.கணேசலிங்கம்- 4ம் வட்டாரம்,புதுக்குடியிருப்பு. க.கனகசிங்கம்-மலையரசிமருந்தகம்,கனகபுரம் வீதி. க.யோகலிங்கம்-திருநகர், கிளிநொச்சி. வ.ஜெனகன்- இசையரசு மருந்துப்பால்மா, கிளிநொச்சி. பு.மனோகரன்- உதயநகர்கிழக்கு, கிளி நொச்சி. க.சற்குணராசா-பிரமந்தனாறு, விசுவமடு.சி.பிலேந்திரன்-மது மருந்தகம்,கிளிநொச்சி. வே.நவநீத ராசா- இராமநாதபுரம், கிளிநொச்சி. ப.ஞானசேகரன்-சில்வாவீதி, வட்டக்கச்சி கு.பரமேஸ்வரன்-அனிஞ்சியன்குளம், மல்லாவி. சி.சசிக்குமார்- 7ஆம் யூனிற், இராமநாதபுரம். இ.வாசகீதன்-முருகன் மருந்தகம், விசுவமடு. த.கனகசிங்கம்- செல்வி மருந்தகம், கிளிநொச்சி. செ.கிருபாகரன்-குமரன் மருந்தகம், முல்லைத்தீவு. பொ.ஸ்ரீதரன்- சிவநகர், புதுக்குடியிருப்பு. து.கணேசராஜன்- தேவிபுரம்'அ' பகுதி, புதுக்குடியிருப்பு. செ.செல்வச் சந்திரன்- அம்மன மருந்தகம், ஸ்கந்தபுரம். சு.நளாயினி- கட்டைக் காடு, தருமபுரம். சி.சிவானந்தினி- இறை குமரன் மருந்தகம்புதுக்குடியிருப்பு, க.ராதிகா-யாழ் மருந்தகம், மல்லாவி. ந.கேதீஸ்வரன்- யோகபுரம் மல்லாவி. கு.செல்வலதா-ஐயனார் காட்டுக் குடியேற்றம், புதுக்குடியிருப்பு. சு.கணேசராஜன்- 8ம் வாய்க்கால், உருத்திரபுரம். கு.பரமேஸ்வரன் - அனிஞ்சியன்குளம், மல்லாவி. இ.சரிதா-முருகன் மருந்தகம். விசுவமடு. சி.வசந்தி- இறைகுமரன் மருந்தகம் புதுக்குடி யிருப்பு. ஸ்ரீ.சேதுராம லட்சுமி-1ம் வட்டாரம்புதுக்குடியிருப்பு. ஸ்ரீ.ஸ்ரீகாந்த வதனி- அம்பாள்குளம், கிளி நொச்சி. ஞா.ரெங்கநாயகி- உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி. ரு.கேதீஸ்வரி-மாமார், பளை.

# இசைத்தட்டு வெளியீட்டு விழா

இசைவாணர் கண்ணனின் இசையில் முறிகண்டி முதல்வன் அடியார் கவிஞர் தை. காமராச் அவர்களின் பக்திப் பாடல் இசைத் தட்டு வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கவிஞர் ச.வே.பஞ்சாட்சரம் தலைமையில் திருமுறி கண்டி பிள்ளையார் ஆலய முன்றலில் இந் [illegible]வு நடைபெறவுள்ளது.

# விடுதலைப் புலிகள் ஏடு இன்று வெளிவருகிறது

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகார பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' மாசி மாத இதழ் இன்று வெளிவருகின்றது.

ஏன் இந்தப் பொதுத் தேர்தல் தமிழருக்கு முக்கியமானது என்ற பிரதான தலைப்புடனும் மக்கள் ஆணை மூலம் அரசியல் தீர்வுக்கு வலியுறுத்துவோம்என்ற தலைப்பினை ஆசிரியர் தலையங்கத்துடனும் வெளிவரும் இவ்விதழில் என்னதான் நடக்கப் போகிறது? போர்க்களமும் பெண்கள் பார்வையும் என்பன உள்ளிட்ட கட்டுரைகள், போராளியின் குருதிச்சுவடு, கவிதை, சிறுகதை என பல்வேறு விடயங்களைத் தாங்கி வெளிவருகின்றது.

### திருமலையில்...

கொண்டு வருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தனர். பொலிஸ் அதிபர் தயா சமரவீர அந்த இடத்துக்கு நேரில் சென்று விசாரணைகளை ஆரம்பித்தார். மாணவர்களை மோதிய வொறியின் சாரதி பொலிசாரினால் கைது செய்யப்பட்டார். திருகோணமலை நீதவான் எஸ்.தியாகேந்திரன் விபத்து நடைபெற்ற இடத்தை நேரில்சென்று பார்வையிட்டதுடன் மரண விசாரணைகளையும் நடத்தினார். (25)

### தாம்...

பொருட்களைப் படைத்தரப்பு சாவகச்சேரி நகரசபை நிர்வாகத் திடம் முன்னர் கையளித்திருந்தது. இது தொடர் பாக உள்ளூர் ஊடகங்கள் மூலம் யாழ் படைத்தலைமை பிரச்சாரங்களையும் மேற்கொண்டிருந்தது.

எனினும் நேற்று சாவகச்சேரி நகரசபைக்கு வருகை தந்த படை அதிகாரிகள் அவை தமக்கு மீளத் தேவையெனக் கோரி நாம் எடுத்து வந்திருந்த டிராக்டர் வாகனங்களில் அவற்றை ஏற்றிச் சென்றுள்ளனர். (27)

### தன்னாட்சி....

நடைபெற்றது. புல்மோட்டை-திருமலை வீதி சந்தியில் நடைபெற்ற கூட்டத்தில் கூட்டமைப்பு வேட்பாளர்களான க.துரைரட்ணசிங்கம், சதா.சண்முகநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தலைமை வேட்பாளர் சம்பந்தன் மேலும் சொல்லியதாவது:- "ஏப்ரல் 02இல் நடக்கப்போவது சாதாரண தேர்தல் அல்ல. இத்தேர்தல் வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நடத்தப்படும் கருத்துக்கணிப்பாக அமையப்போகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விடுதலைப் புலிகள் பகிரங்கமாக ஆதரிப்பதற்கு முன்வந்துள்ளார்கள். எதிர்வரும் பொதுத் தேர்தலின் முடிவுகள் தென்பகுதி பெரும்பான்மை இனக் கட்சிகளினால் தனித்து நின்று அரசாங்கத்தை அமைக்கத் தேவையான பெரும்பான்மையைக் கொடுக்கப் போவதில்லை என்பது தெரிந்த உண்மையாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறைந்தது 20 ஆசனங்களைக் கைப்பற்றி யார் ஆட்சி அமைப்பது என்பதை முடிவு செய்யக்கூடிய நிலைக்கு வரப் போவதாக சர்வதேச சமூகமும் அரசியல் ஆய்வாளர்களும் கணிக்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முஸ்லிம் மக்களின் நிலை தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையில் முஸ்லிம் மக்களின் பங்களிப்புக் குறித்து விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் தெளிவான கருத்தைக் கொண்டுள்ளது. முஸ்லிம் மக்களின் பண்பாடு, பாரம்பரியங்கள், அரசியல் அபிலாசைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் விடுதலைப் புலிகள் தலைமைத்துவம் உறுதியாகவுள்ளது. ஒரு இனம் இன்னொரு இனத்திற்கு அநீதி செய்வதன் மூலம் நிம்மதியாக வாழ முடியாது. வடக்கு கிழக்கு பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வு , இம் மாகாணத்தில் வாழுகின்ற முஸ்லிம மக்களுடைய அபிலாசைகளை அவர்களுக்குத் திருப்திதரக்கூடிய வகையில் தீர்ப்பதில் தான் தங்கியுள்ளது. வடக்கு கிழக்கு தமிழ் மக்களினது மாத்திரமல்ல, முஸ்லிம் மக்களினதும் தாயகமாகும். எனவே தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இணைந்து தமிழ் பேசும் மக்களினது தாயகத்தைப் பாதுகாக்க அணிதிரள வேண்டும். அதற்கான வாய்ப்பாக தேர்தலை நாம் பயன்படுத்த வேண்டும்." என்று சம்பந்தன் தெரிவித்தார்.

### 24 மணி....

பாடுகளையும்,

ஐக்கிய தேசியக்கட்சி 3 முறைப்பாடுகளையும் செய்துள்ளது

வேட்பு மனுதாக்கல் செய்யப்பட்ட தினத்தில் இருந்து இது வரை இடம் பெற்ற தேர்தல் வன்முறைகள் 189 ஆகும். (32)

### கிழக்கில்...

கிழக்கு மாகாண விசேட தளபதி ரமேஸ், கிழக்கு மாகாண அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் ஏனைய முக்கிய உறுப்பினர்கள் எமது தலைவருடனும், தலைமைப் பீடத்துடனும் விரி வான கலந்துரையாடல்களை மேற் கொண்டு வருகின்றனர் என்று தெரிவித்தார். தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி தற்காலிகமானதென்றும், இதற்கான தீர்வு மிக விரைவில் எட்டப்பட்டுவிடும் என்றும் அரசியல்துறைப் பொறுப் பாளர் மேலும் தெரிவித்தார்.சந்திப்பின் இறுதியில், மிகக் குறுகிய கால அவகாசத்தில் இச்சந்திப்பை ஏற்படுத்தி, ஆரோக்கியமான கலந்துரையாடலை மேற்கொள்ள உதவியமைக்காக அரசியல் துறைப் பொறுப்பாளருக்கு மேஜர் ஜெனரல் புறூவ்ஹொவ்டே நன்றி கூறினார்.

### பிரச்சாரத்தில்....

யலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை, ஈ.பி.டி.பி.யின் கட்டுப்பாட்டின் கீழ் தீவகம் இருந்த வேளையில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் மனிதப் படுகொலைகள் மற்றும் தமிழினத்தின் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரான ஜே.வி.பி. யுடனான உறவுஎன தொடர்ச்சியாக கேள்விகளால் அவர்கள் திணறடித்தனர். இவற்றிற்கு பதிலளிக்க முடியாதே ஈ.பி.டி.பி.யினர் அங்கிருந்து உடன் வெளியேறி விட்டனர்.

இதையடுத்து பொலிஸ் நிலையங் களுக்கு முன்பதாக நின்று துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து வருவதுடன் பிரச்சாரத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். (27)

### தமிழ்...

உண்டு. அரசியல் உரிமை என்னும் பொழுது கட்சிகளில் உறுப்பினர்களாக இருக்கலாம், கட்சிகளில் பதவிகளை வகிக்கலாம், தேர்தல்களில் வேட்பாளர்களாகவும் போட்டியிடலாம் பிரச்சாரம் செய் யலாம், கட்டுரைகள் வெளியிடலாம்.

வழங்கப்பட்ட அரசியல் உரிமைகளை அனுபவிக்காது அல்லது உபயோகிக்காது விட்டு விட்டு வேறு உரிமைகளைக் கோருவது சிறந்தது அல்ல. எனவே, சமூகத்தை வழிப்படுத்த வேண்டிய அதிபர்கள், ஆசிரியர்கள் முக்கியமான தேர்தலை எதிர்கொண்டிருக்கும் இச்சூழ்நிலையில் முழுமையாக தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு தமிழ் இனத்திற்கு வழிகாட்ட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று எமது தேசிய மட்டத்திலும், சர்வதேச அரங்கிலும் தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழினத்தின் ஏக பிரதிநிதிகள். அவர்களுடன் பேசி பிரிந்து போகின்ற சுயநிர்ணய உரிமையுடன் கூடிய கூட்டாட்சி என்ற அடிப்படையில் அரசியல் தீர்வு காணவேண்டும் என்பதாகும்.

இவ் அடிப்படைக் கொள்கைகளை முழுமையாக தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கி, பகிரங்கமாக வெளிப்படுத்தி இருக்கும் ஒரேயொரு கட்சி வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகும்.

எனவே, தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு ஆதரவாக பிரச்சாரங்களில் ஈடுபட்டு அதன் வேட்பாளர்கள் முழுமையாக வெற்றிபெற சகல விதங்களிலும் ஒத்துழைப்பை நல்குமாறு சங்கம் கோருவதாக பொதுச் செயலாளரால் விடுக்கப்பட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சங்கத்தின் சகல கிளை, வலயச் செயலாளர்களையும் தமிழ் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர்களுடன் தொடர்பு கொண்டு அவர்கள் வெற்றி பெறுவதற்குத் தேவையான பிரச்சார வேலைகளில் முழுமையாக ஈடுபடும்படியும் கோருவதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் நு. மகாசிவம் அவர்களால் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# A.O.M.A
## அக்கடமி ஒவ் ஓறியண்டல் மார்ஷல் ஆட்ஸ்

சோட்டோகான் கராத்தே கழக, சிரேஷ்ட ஆசிரியர்களால் அக்கழக மாணவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் இடம்பெறும்.

| | | |
|---|---|---|
| இடம் | : | மல்லாவி அனிஞ்சியன்குளம் அ.த.க.பாடசாலை |
| காலம் | : | 06.03.2004 பி.ப. 04.00மணி (சனிக்கிழமை) |
| இடம் | : | கிளிநொச்சி ம.மைதானம் |
| காலம் | : | 07.03.2004. பி.ப. 2.00 மணி (ஞாயிறு) |

ஆசிரியர்
றேமன், மோகன்

(சி-9321)



# துயர் பகிர்கின்றோம்

## சிவகுரு செல்வரத்தினம்

எமது கல்லூரியின் பழைய மாணவனும் தற்போதைய ஆசிரியருமாகிய கருணாகரனின் அன்புத் தந்தையார் அமரர் சிவகுரு செல்வரத்தினம் அவர்களின் பிரிவுச் செய்திகேட்டு ஆழ்ந்த கவலை அடைந்தோம். அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொண்டு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள்,
நலன்புரிச்சங்கம்,
கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி,
கிளிநொச்சி.

(4289)



# 41 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 20 11 1976



இறப்பு 25 01 2004

நாட்டுப்பற்றாளர் அமரர்
## வீரசிங்கம் சுரேஸ்நாதன் (சுரேஸ்)
காரைநகர் கிழக்கு, காரைநகர்

05.03.2004 இன்று எமது இல்லத்தில் 41ஆம் நாள் நினைவு தினத்திலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

குடும்பத்தினர்

(4001)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.